




We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## பிப்ரவரி - 2020

We Are Here..!! To Guide You..!!






# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## பிப்ரவரி - 25.02.2020

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- சர்வதேச நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்








# தமிழக நிகழ்வுகள்

- **பெண் குழந்தைகளுக்கான பாதுகாப்பு திட்டத்தை முதல்வர் எடப்பாடி.கே.பழனிசாமி தொடங்கி வைத்தார்.**
    - சென்னை தலைமை செயலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் 14 பெண் குழந்தைகளுக்கு தலா ரூ.25 ஆயிரம் வைப்பீட்டு தொகைக்கான பத்திரங்களை முதல்வர் வழங்கினார்.
    - **செய்தி துளிகள்:**
        - முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்களின் பிறந்த தினம், மாநில பெண்குழந்தைகள் பாதுகாப்பு தினமாக கடைபிடிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

- **திருச்சியில்** உள்ள **தேசியத் தொழில்நுட்ப நிறுவனமானது "திருமதிகார்ட்"** என்ற பெயர் கொண்ட **சுய உதவிக் குழுக்களால்** (SHG – Self Help Group) தயாரிக்கப்பட்ட பொருள்களுக்கான **கைபேசிச் செயலியை உருவாக்கியுள்ளது.**
    - இந்தச் செயலியானது மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையுடன் இணைந்து உருவாக்கப்பட்டுள்ளது.
    - **செய்தி துளிகள்:**
        - இந்தச் செயலியானது பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதையும் சந்தை வாய்ப்புகளை அவர்கள்

(பெண்கள்) தடையின்றி அணுக உதவுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## தேசிய நிகழ்வுகள்

- பாதுகாப்பு மந்திரி **ராஜ்நாத் சிங்** சமீபத்தில் **டெல்லி கன்டோண்ட்மென்ட்டில்** ஒரு **புதிய இராணுவ தலைமையகத்தை** நிர்மாணிக்க **அடிக்கல் நாட்டினார்.** இந்த கட்டிடத்திற்கு "**தல் சேனா பவன்**" என்று பெயரிடப்பட்டுள்ளது.
    - இந்த கட்டிடம் GRIHA-5 மதீப்பீட்டு விதிமுறைகளை ஏற்றுக்கொண்டது.
    - **செய்தி துளிகள்:**
        - GRIHA என்பது ஒருங்கிணைந்த வாழ்விட மதிப்பீட்டிற்கான பசுமை மதிப்பீடு ஆகும்.
        - இந்த கட்டிடங்கள் நகராட்சி கழிவுகளிலிருந்து அல்லது மறைமுகமாக மின்சார உற்பத்தியில் இருந்து வளங்களை பயன்படுத்துகின்றன.

## சர்வதேச நிகழ்வுகள்

- **இந்தியா – அமெரிக்கா இடையே ரூ.21,000 கோடியில்** (300 கோடி டாலர்) **பாதுகாப்பு ஒப்பந்தம் இறுதி செய்யப்படவுள்ளது** என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறினார்.

- இரண்டு நாள் பயணமாக தனது குடும்பத்தினருடன் இந்தியா வந்துள்ள **அதிபர் டிரம்ப்,** குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் உள்ள மொடேரா கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற **"நமஸ்தே டிரம்ப்" நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினார்.**
- **செய்தி துளிகள்:**
    - 1991-இல் சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்ட பிறகு இந்தியா, அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளினுடனான தனது வெளியுறவுக் கொள்கைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தது. இதன் காரணமாக இந்திய வர்த்தகம், பொருளாதாரம், கணினி நிறுவனங்களின் இணைப்பு ஆகியவை மேம்படத் தொடங்கியது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- வரும் **2022** இல் **காமன்வெல்த் துப்பாக்கி சுடுதல் வில்வித்தை போட்டிகளை இந்தியாவின் சண்டீகரில்** நடத்த **காமன்வெல்த் விளையாட்டு கூட்டமைப்பு (சி.ஜி.எப்) ஒப்புதல் அளித்துள்ளது.**
    - வரும் 2022 ஆம் ஆண்டு இங்கிலாந்து பர்மிங்ஹாம் நகரில் காமன்வெல்த் போட்டிகள் நடக்கவுள்ளன.
    - **செய்தி துளிகள்:**
        - பர்மிங்ஹாம் நகரில் வில்வித்தை மற்றும் துப்பாக்கி சுடுதல் போட்டிக்கு கட்டமைப்பு வசதி இல்லாததால்

இவை இரண்டும் இந்தியாவில் நடைபெறவுள்ளன.

## திருக்குறள்

**குறள்: 119**

குறள் பால்: அறத்துப்பால்

குறள் இயல்: இல்லறவியல்

குறள் அதிகாரம்: நடுவு நிலைமை

**சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா**

**உட்கோட்டம் இன்மை பெறின்.**

**விளக்கம்:** நடுவுநிலையாவது ஒருவனது சொல்லில் குற்றம் இல்லாதிருத்தல் அவனது உள்ளம் நடுவு நிலைமையில் இருக்குமானால், சொல்லில் குற்றம் இல்லாத நிலைமை உண்டாகும்.

We Shine Academy™